**இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை - 2018**

-----------------------------------------------------------------------------------------------------------------------

## 1.1 அபிப்பிராயம்

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை

மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள

ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

---

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகாரச்சட்டம் - 12(1)(ஆ)(v) ஆம் பிரிவு | இலங்கை வர்த்தகக் கைத்தொழில் சம்மேளனத்தினால் சமர்ப்பிக்கப்படட பெயர்களிலிருந்தான குழுவொன்றிலிருந்து சபைக்கான பிரதிநிதி ஒருவர் தெரிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் சம்மேளனத்தின் குழுவிற்கான பெயர்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததால் மேற்குறிப்பிடப்பட்ட பிரதிநிதி இன்னமும் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | அமைச்சு அவர்களின் பரிந்துரைகளை பெற்றிருக்காததால் அமைச்சால் இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்திலிருந்து பிரதிநிதி நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | 1995 இன் 15 ஆம் இலக்க கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சபை இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமனங்கள் அதிகாரச்சட்டம் - 12(1)(ஆ)(vii) ஆம் பிரிவு | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (யூஜீசி) அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற பல்கலைக்கழகங்களிலுள்ள கணக்குகள் அல்லது வணிக முகாமைத்துவம் அல்லது வணிக நிர்வாகத்தின் பிரிவுகள், பீடங்கள் மற்றும் பட்டப்பின்படிப்பு நிறுவனங்களை பிதிநிதித்துவப்படுத்துவதற்காக | 2015 - 2019 காலப்பகுதியொன்றின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைகுழுவிடமிருந்து (யூஜீசி) அமைச்சு பரிந்துரைகளை பெற்றிருக்காததால் அமைச்சால் யூஜீசி இலிருந்து பிரதிநிதி நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | 1995 இன் 15 ஆம் இலக்க கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு திடடங்கள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சபை இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பரிந்துரைக்கப்பட்ட மூன்று நபர்கள் கொண்ட குழுவொன்றிலிருந்து சபைக்கு நபரொருவர் தெரிவுசெய்யப்பட வேண்டிய போதிலும் மேற்குறிப்பிடப்பட்ட பிரதிநிதி நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | நல்லாளுகைக்கான பொதுமுயற்சிகள் வழிகாட்டல்களின் பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கை – 9.6 ஆம் பந்தி | முறையான செயலாற்றல் மதிப்பீட்டு முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். | சபையால் குறிப்பிடப்பட்ட யோசனைகள் மற்றும் திருத்தங்களை உள்ளடக்கி பல மீளாய்வுகள் மற்றும் மாற்றங்களூடாக செலாற்றல் மதிப்பீட்டுப் படிவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உரிய சுற்றறிக்கையுடன் சபை இணங்குதல் வேண்டும். |
| (ஈ) | நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல்களின் பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கை - 9.4 ஆம் பந்தி | செயன்முறைக் கையேடு (Manual Procedures) கணக்காய்வுத் திகதி வரையிலும் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | அச் செயன்முறைக் கையேடு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் சபையின் அங்கீகாரத்திற்காக அடுத்த சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. | உரிய சுற்றறிக்கையுடன் சபை இணங்குதல் வேண்டும். |
| (உ) | 01/2014 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கை – 4 ஆம் பந்தி | 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு இணங்க சபையால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் தொடர்பான ஆவணங்கள் 2019 மே 30 இல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உரிய சுற்றறிக்கையுடன் சபை இணங்குதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அரசாங்க மானியங்கள் சபையின் பிரதான வருமான மூலமாக காணப்படுகின்றதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இது மீளாய்வாண்டின் போது ரூபா 7,285,819 ஆல் அல்லது 8 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. எனினும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது சர்வதேச உறுப்புரிமைகள் மற்றும் பயிற்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான செலவீனங்கள் முறையே 46 சதவீதம் மற்றும் 144 சதவீதத்தால் முக்கியத்துவமானளவு அதிகரித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளர்யவு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 யூலை 01 தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் நான்கு ஆண்டு காலப்பகுதிக்கு அலுவலகமாக முதலாவது மாடியை பயன்படுத்துவதற்கு இலங்கை வேதாகம இல்லத்துடன் வாடகை உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது வாடகையாக ரூபா 4,149,492 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அம் மாடிப்பகுதி குறித்த நோக்கத்திற்காக சபையால் பயன்படுத்த முடியாதிருந்ததுடன் உள்ளக பாகப்பரிவினை நிர்மாணம் இன்னமும் ஆரம்பிக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க கண்காணிப்பதற்கு மேலதிக பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்யும் தேவை எஸ்எல்ஏஎஎஸ்எம்பீ இற்கு காணப்பட்டதால் மேலதிகப் பதவியணியினர் தங்குவதற்காக ஏற்கனவே உள்ள அலுவலகத்திற்கு அண்மையில் மேலதிக இடமொன்றை எஸ்எல்ஏஎஎஸ்எம்பீ தேடிவருகின்றது.<br><br>2017 ஆம் ஆண்டின் ஆரம்ப மாதங்களின் போது அடுத்துள்ள காணிகளில் மிக உயரமாக வளர்ந்துவரும் கட்டிட நிர்மாணங்களிற்காக நிலத்தூண்கள் இடுவதுடன் | சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | (Pile driving) எதிர்கொள்ளப்பட்ட சில குறுக்கீடுகள் காரணமாக முதலாவது மாடியின் உள்ளக பாபப்பரிவினை வேலைகளை ஆரம்பிக்கும் செயன்முறைகள் பிற்போடப்பட்டிருந்தது. | |
| (ஆ) | சபைக்கான முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை (எம்ஐஎஸ்) ஆய்வு செய்து, வடிவமைத்து, அபிவிருத்தி செய்து அமுல்படுத்துவதற்காக 2016 யூன் 03 இல் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபைக்கும் இலங்கை கற்றல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரிற்கும் இடையில் புரிந்துணர்வு விஞ்ஞாபனமொன்று கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் அது இன்னமும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டம் வழங்கப்படுவத்றகாக காணப்பட்ட போது ஐசீரீஏ இன் பாதீட்டுக் கட்டுப்பாடுகள் காரணமாக தொடர முடியாதிருந்ததை குறிப்பிட்டு ஐசீரீஏ சேவையிலிருந்தான அவர்களது மீளப்பெறுதலை அறிவித்திருந்தது. | முறையான முகாமைத்துவ தகவல் முறைமையொன்று அமுல்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட வணிக நிறுவனங்களால் (எஸ்பீஈஎஸ்) இலங்கை கணக்கீட்டு நியமம் மற்றும் கணக்காய்வு நியமங்களிற்கிணங்க கண்காணிப்பது சபையின் பிரதான தொழிற்பாடாக உள்ளது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | எஸ்பீஈஎஸ் இனை இனங்காண்பதற்காக சபையால் பொருத்தமான பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டோ அல்லது அமுல்படுத்தப்பட்டோ இருக்கவில்லை. | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டம் அமுலுக்கு வந்த பின்னர் தனியார் நிறுவனங்கள் தங்களது கணக்குகளை கோவைப்படுத்த | பொருத்தமான பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டியதில்லை என்பதால் கம்பனிப் பதிவாளரிடமிருந்து அத்தகைய தனியார் கம்பனிகள் தொடர்பான நிதித் தகவல்களை பெறமுடியாதிருந்தது. ஆகையால் கம்பனிப் பதிவாளர் ஊடாக தகவலை பெற்றுக்கொள்ளுதல் சாத்தியமற்றிருந்தது. | |
| (ஆ) | ரூபா 75,000 + வற் இணங்கப்பட்ட கட்டணம் மற்றும் உள்ளபடியான செலவினங்களின் மீளளிப்புடன் 2014 தொடக்கம் 2018 வரையான நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்வது தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வேண்டப்பட்ட தகவல்களை வழங்குவதற்கு உள்ளகக் கணக்காய்வாளர்களுடன் உடன்படிக்கை ஒன்றை சபை கைச்சாத்திட்டிருந்தது. 2019 மே 09 இல் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட மட்டம் வரை மேற்கொள்ளப்படவில்லை. முகாமைத்துவ தகவல் முறைமை காணப்படாததன் காரணமாக மீளாய்வு நோக்கங்களிற்கு தேவையான பிரதான செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட தகவல்கள் சபையில் தயாராக காணப்படாதமை அவதானிக்கப்பட்டது. | தன்னியக்க முறைமையூடாக அத் தகவல்களை அனுகுதல் எஸ்எல்ஏஎஸ்எம்பீ இல் காணப்படாததால் அத்தகைய தகவல்கள் கோவைகள் ஊடாக கைமுறையாக பெறப்பட வேண்டியிருந்தன. | விரைவாக அனுகுவதற்காக பிரதான செயற்பாடு தொடர்பான தகவல்களை சபை பேணுதல் வேண்டும். |
| (இ) | அந்த எஸ்பீஈஎஸ் உடன் ஏற்கனவே தொடர்புபட்டிருந்த கண்டுபிடிப்புக்கள் தொடர்பாக சபையால் சில எஸ்பீஈஎஸ் தொடர்பாக பின்தொடர் | அவர்களால் எதிர்காலத்தில் அத்தகைய அவதானிப்புக்களுடன் இணங்குதல் காணப்படுகின்றதுடன் | சபையால் பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணக்கப்பாட்டை முன்னேற்றுவதற்கு அவர்களிற்கு அறிமுகப்படுத்துவதற்கான மறைமுகமான அளவீடுகளாக பதிலளிப்பதற்கு நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கு பின்னூட்டல் படிவம் (Feedback form) அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அப் பின்னூட்டல் படிவத்திற்கு எஸ்பீஎஸ் ஆல் பதிலளித்தல் கட்டாயமானதாக இருக்கவில்லை. | |

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 31 இல் உள்ளவாறு சபையில் 11 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் 08 வெற்றிடங்கள் சிரேஷ்ட நிலைக்குரியதாகும். | உயர்ந்த சம்பளமொன்றில் பணிப்பாளர் நாயகத்தை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தை பெறுவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் பரிந்துரைந்திருந்தது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் ஆட்சேர்ப்புத் திட்டம் அங்கீகரிப்பதற்காக நிலுவையாகக் காணப்படுகின்றது. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் அல்லது பதவியணி மீளாய்வு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மேலும் 2019 ஏப்ரல் 24 தொடக்கம் சபையின் பணிப்பாளர் நாயகத்தின் பதவி வெற்றிடமாக காணப்படுகின்றது. | தொழில்நுட்ப ரீதியாக தகுதியான சிரேஷ்ட பட்டயக் கணக்காளர்களிற்கு சந்தையில் காணப்படும் சம்பளத்தை விட மிகவும் குறைவாக காணப்படுவதன் காரணமாக அப் பதவிக்கு ஏற்கனவே இருந்த சம்பள | சாத்தியமானளவு விரைவாக பணிப்பாளர் நாயகத்தின் பதவி நிரப்பப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அளவுத்திட்டத்துடன் பொருத்தமான விண்ணப்பதாரியை இணைப்பு செய்ய முடியாதிருந்தது. | |
| (இ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் 04 சிரேஷ்ட பதவிகளிற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | நிரந்தரப் பதவியணியின் கீழான இப் பதவிகளிற்காக அங்கீகரிக்கப்பட்ட சம்பள அளவுத்திட்டங்களினுள் தேவையான ஆண்டு அனுபவத்துடன் தொழில்நுட்ப ரீதியாக தகுதியான சிரேஷ்ட பட்டயக் கணக்காளரை இணைப்புச் செய்வதற்கு முயாதிருந்ததன் காரணமாக முற்றிலும் ஒப்பந்த அடிப்படையில் அப் பதவிகள் நிரப்பப்பட்டிருந்தன. | ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்புக்களிற்கு அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஈ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கு முரணாக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த இரண்டு ஊழியர்களிற்கு உயர் சம்பனம் மற்றும் மேலதிக நலன்களை சபை செலுத்தியிருந்தது. | நிரந்தரப் பதவியணியின் கீழான பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் பதவிகளிற்காக அங்கீகரிக்கப்பட்ட சம்பள அளவுத்திட்டங்களினுள் தேவையான ஆண்டு அனுபவத்துடன் தொழில்நுட்ப ரீதியாக தகுதியான சிரேஷ்ட பட்டயக் கணக்காளரை இணைப்புச் செய்வதற்கு முயாதிருந்ததன் காரணமாக முற்றிலும் ஒப்பந்த அடிப்படையில் அப் பதவிகள் நிரப்பப்பட்டிருந்தன. | சம்பளம் மற்றும் மேலதிக நலன்களின் கொடுப்பனவிற்காக அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |